
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1038

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

33

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!




# கழகம்; விழி மூடாமல் காவல் புரியும் சிப்பாய்!

*1976*-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலையை எதிர்த்த காரணத்திற்காக தி.மு.கழகத்தின் ஆட்சி கலைக்கப்பட்டது. அதன் பின்னர், 1989-ஆம் ஆண்டு வரை கழகம் எதிர்க்கட்சி நிலையிலிருந்து மிசா காலக் கொடுமைகள், பல்வேறு அடக்குமுறைகள், சோதனைகள், வேதனைகள் அனைத்தையும் சந்தித்து, 1989-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைத்தது. இரண்டாண்டு ஆட்சி நடைபெற்றுக் கொண் டிருந்த நிலையில், தேர்தல் வாக்குறுதிகளை 80 சதவிகிதத்துக்கு மேல் நிறைவேற்றி இருந்த நிலையில், தொலைநோக்கு வளர்ச்சித் திட்டங்கள் என தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் சாதனைச் சரித்திரத்தைப் படைத்துக் கொண்டிருந்தார். அதனால், அதை நீடிக்க விடவில்லை அம்மையார் ஜெயலலிதா.

வீண்பழிகளைச் சுமத்தி பேட்டிகள், கழக அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது என்றும் தேச விரோதமாக நடக்கிறது என விடுத்த அறிக்கைகளையும் ஒரு சாக்காக வைத்து, 1991-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிரதமர் சந்திரசேகர், தனது மனசாட்சிக்கு விரோதமாக தமிழ்நாட்டில் கழக ஆட்சியைக் கலைக்க உத்தரவிட்டார்.

நாடு முழுவதும் அவரது செயலையும், குடியரசுத் தலைவராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் அவர்களின் ஜனநாயக விரோத மனப்பான்மையையும் கண்டித்து குரல்கள் எழுந்தன. கழக அரசு கலைக்கப்பட்ட 34 நாட்களில், பிரதமர் சந்திரசேகர் ஆட்சியும் கவிழ்ந்தது. மீண்டும் நாடாளுமன்றத்துக்கும் சட்டமன்றத்துக்கும் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு, பிரச்சாரங்கள் தீவிரமடைந்தன. அந்த நேரத்தில்தான், மே மாதம் 21-ஆம் தேதி, தமிழ்நாட்டில் திருப்பெரும்புதூர் பொதுக்கூட்டத்தில், இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள், நினைத்துக்கூட பார்க்க முடியாத துயரத்துக்கு ஆளானார்.

### சூறையாடப்பட்ட சொத்துகள்

“ஒரு நீண்ட எதிர்காலத்துக்குரியவரும், இந்திய அரசியலில் தனக்கென ஒரு இடத்தை பெற்றிருந்தவருமான ராஜீவ்காந்திக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமையான முடிவு யாராலும் தாங்கிக் கொள்ள முடியாததாகும்” என துயரக் கண்ணீர் வடித்தார் நம் தலைவர் கலைஞர். ஆனால், அந்தத் துயரத்திலும் துயரமாக, கழகத்தினர் சந்தித்த கொடுமைகள் அமைந்தன.

கழகத்தினர் வீடுகளிலும் அலுவலகங்களிலும் புகுந்து கொள்ளை நிகழ்த்தப்பட்டன. கழகத்தினர், கழக குடும்பத்தினர் தாக்கப் பட்டனர். பல இடங்களில் தீ வைக்கப்பட்டன. கழகத்தினருக்குச் சொந்தமான கார்கள், இரு சக்கர வாகனங்கள் கொளுத்தப்பட்டன. ‘முரசொலி’ அலுவலகம் தாக்கப்பட்டு வாகனங்கள், இயந்திரங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. மதுரையில் ‘தீக்கதிர்’ அலுவலகம் தாக்கப்பட்டதுடன், மேலாளர் ஆர்.ராமராஜ் கத்தியால் குத்தப்பட்டார். அறந்தாங்கியில் திருநாவுக்கரசு தங்கி இருந்த விடுதியும், அதையொட்டிய ஜவுளி நிறுவனமும் கொளுத்தப்பட்டன. பல பேருந்துகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன், கழகத்தின் இரண்டு தொண்டர்கள் கொலை செய்யப் பட்டார்கள். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இப்படிக் கலவரங்கள் ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்கள் பலருடைய கோடிக்கணக்கான ரூபாய் சொத்துகள் நாசமாகின.

### புயலாகவே வீசிய அலை

ஆட்சியைக் கலைத்தது நியாயமா? என கழகமும் அதன் கூட்டணிக் கட்சிகளும் மக்களைச் சந்தித்த நேரத்தில், மக்களின் ஆதரவு கழக அணியின் பக்கம் திரண்ட நேரத்தில், ராஜீவ்காந்தி அவர்களின் இழப்பை வைத்து, அம்மையார் வீண்பழி சுமத்தி, பொய்ப் பிரச்சாரம் செய்வதில் வெற்றி பெற்றுவிட்டார்.

‘அனுதாபம் அலையாக மட்டுமின்றி, புயலாகவே வீசிவிட்ட காரணத்தால், மக்களின் தீர்ப்பு இவ்வண்ணம் அமைந்து விட்டது’ என உடன்பிறப்புகளை சமாதானம் செய்த கலைஞர், “ஆட்சிப்பொறுப்பில் இல்லாவிட்டாலும், நாட்டு மக்களின் அமைதியான வாழ்வில் அக்கறை கொண்டு விழி மூடாமல் காவல் புரியும் சிப்பாயாக கழகம் பணியாற்றும்’’ என நம்பிக்கை அளித்தார்.

சொன்னதுபோலவே, செயலிலும் இறங்கினார் கலைஞர். அந்த ஆண்டு நடைபெற்ற தாக்குதல்களில் ஏற்பட்ட இழப்பைச் சரிகட்ட, பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம், அரசின் சார்பிலே இழப்பீடு கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைத்து வந்தனர். அ.தி.மு.க. ஆட்சியினர் அந்தக் கோரிக்கையை ஏற்கவில்லை. அதையடுத்து கழகத்தின் சார்பில், பொதுச் செயலாளர் பேராசிரியர் சென்னை உயர் நீதிமன்றத்தில் 1991-ஆம் ஆண்டு மேல்முறையீட்டு மனு ஒன்றினைத் தாக்கல் செய்தார்.

> “கழகம் ஆட்சி பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், நாட்டு மக்களின் அமைதியான வாழ்வில் அக்கறை கொண்டு விழி மூடாமல் காவல் புரியும் சிப்பாயாக பணியாற்றும்.”

அந்த மனுவில், ‘விசாரணைக் கமிஷன் ஒன்றினை அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும்’ என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அ.தி.மு.க. அரசு தாக்கல் செய்த பதிலில் அந்தக் கோரிக்கையை ஏற்க முன்வரவில்லை.

### கே.ஜெ.எம். ஷெட்டி ஆணையம்

ஆனாலும், சென்னை உயர்நீதி மன்றம், கழகத்தின் சார்பில் போடப்பட்ட வழக்கினை ஏற்று, முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி, கே.ஜெ.எம்.ஷெட்டி அவர்களை சிறப்பு ஆணையராக நியமித்து, பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து, நிவாரணத் தொகை குறித்து பரிந்துரை செய்ய வேண்டுமென்று ஆணையிட்டது.

அ.தி.மு.க. ஆட்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், கே.ஜெ.எம்.ஷெட்டி அவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த முறையீடுகளை விசாரித்து, மாவட்ட ஆட்சியர்களால் பரிந்துரை செய்யப்பட்ட 6,328 மனுக்களைப் பரிசீலனை செய்து மொத்தம் 2 கோடியே 34 லட்சத்து 18 ஆயிரத்து 309 ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது.

ஆனால், சேதத்தின் அளவுகளுடன் ஒப்பிடுகையில், அந்த இழப்பீட்டுத் தொகை மிக மிகக் குறைவாக இருந்ததால், பாதிக்கப்பட்ட பலர் அந்த இழப்பீட்டுத் தொகையை ஏற்க மறுத்து, நீதிமன்றத்திற்குச் சென்றனர். குறிப்பாக, கே.ஜெ.எம். ஷெட்டி பாதிக்கப் பட்டவர்களில் பலருக்கு எவ்வித இழப்பீட்டுத் தொகையையுமே பரிந்துரைக்காமல் விட்டுவிட்டார். அவர்களும் நீதிமன்றத்தில் முறையிட்டுக் கொண்டனர்.

இந்த மனுக்களை எல்லாம் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அரசின் பதிலை கோரியது. ஆனால், அம்மையார் அரசு நீதிமன்றத்திற்கு தெரிவித்த தகவலில், ‘அந்தக் கோரிக்கை மனுக்களையெல்லாம் நிராகரிக்கலாம்’ என்றது. வழக்கு நீதி மன்றத்திலே இருந்த நிலையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. 1996-ஆம் ஆண்டு கழகம் பொறுப்புக்கு வந்தது.

அதையடுத்து, 1991 கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களின் முறையீடுகளை மனதிலே கொண்டு 11.2.1997 அன்று அமைச்சரவையிலே விவாதித்தார் தானைத் தலைவர் கலைஞர். அதையடுத்து, அ.தி.மு.க. அரசு தாக்கல் செய்த மனுவைத் திரும்பப்பெற்று, புதிய பதில் மனு தாக்கல் செய்ய, சென்னை உயர் நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொண்டது.

அதேநேரத்தில், 4.4.1997 அன்று சட்ட மன்றத்தில், அதுதொடர்பாக முக்கிய அறிவிப்பினையும் வெளியிட்டார் முதலமைச்சர் கலைஞர்.

“நிவாரணத்தொகை போதாதென்று கூறி, தொகையைப் பெற்றுக் கொள்ளாத நிலையில், நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்தவர்களின் கோரிக்கைகளையும், குறைந்த அளவு நிர்ணயிக்கப்பட்ட நிவாரணத் தொகையை பெற்றுக் கொண்டு, மேலும் நிவாரணத்தொகை வழங்கப்பட வேண்டுமென்று மனு தாக்கல் செய்தவர்களின் கோரிக்கைகளையும் பரிசீலித்து, நிவாரணம் வழங்கிட உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ்.மோகன் அவர்களைக் கொண்டு ஒரு நபர் ஆணையம் நியமிக்கப்படும்” என்கிற அறிவிப்பு தீர்வாக அமைந்தது.

அந்த ஆணையம் 1065 பேர்களின் மனுக்களை விசாரணை செய்து, ஒரு கோடியே 46 லட்சத்து 70 ஆயிரத்து 751 ரூபாய் மேலும் நிவாரணத்தொகையாக வழங்கிட ஆணையிட்டு. அந்தத் தொகையும் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் உரிய நபர்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் மூலம், “கழகம் ஆட்சி பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், நாட்டு மக்களின் அமைதியான வாழ்வில் அக்கறை கொண்டு விழி மூடாமல் காவல் புரியும் சிப்பாயாக பணியாற்றும்”என நம்பிக்கையை நிறைவேற்றிக் காட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

...தொடரும்

## ‘அவுட்லுக்’ திராவிடம் சிறப்பிதழ்!

‘அவுட்லுக்’ ஆங்கில இதழ் திராவிட இயக்க அரசியலை அலசும் வகையில், ‘திராவிடம்’ என்கிற தலைப்பில் சிறப்பிதழை வெளியிட்டுள்ளது. நூற்றாண்டைக் கடந்த திராவிட அரசியலில், தந்தை பெரியாரின் வருகை, 1925-ஆம் ஆண்டு நிகழ்ந்தது. காங்கிரசில் இருந்து வெளியேறிய பிறகு தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கி, பின்னர், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என வலுவாக அரசியல் இயக்கங்களாக வளர்ந்து, பெரியார் தமிழ்நாட்டு அரசியலைத் தீர்மானித்தவராக, ‘தந்தை’ பெரியாராகக் கொண்டாடப்பட்டு வருகிறார்.




‘பெரியார், திராவிட அரசியல் இயக்கம் கண்டு இப்போது கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் ஆகின்றன. தவிர, திராவிட இயக்கம் முதன்முதலில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து, சுமார் 60 ஆண்டுகளைத் தொட உள்ளது. இன்று, தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க., அதன் ஆட்சியை ‘திராவிட மாதிரி’ என்று அடையாளப்படுத்துகிறது’ என்கிற முன்னுரையுடன் டிசம்பர் 11, சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நூற்றாண்டுகளைக் கடந்த நிலையில், அதற்கு வலுவான எதிர்ப்பைத் தந்த பெரியார் மற்றும் அவரின் வழிவந்த திராவிட அரசியலின் கடந்த காலம் மற்றும் எதிர்காலம் குறித்த விரிவான கட்டுரைகளுடன் இந்த இதழ் வெளிவந்துள்ளது என சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. திராவிட கருத்தியல் வழி தமிழ்நாட்டில் நிகழ்ந்த பண்பாட்டு, அரசியல் மாற்றங்கள் குறித்து ஆனந்த் டெல்டும்டே, எழுத்தாளர் பெருமாள் முருகன், ஆய்வாளர் எஸ்.வி.ராஜதுரை என முக்கிய ஆளுமைகள் கட்டுரை எழுதி இருக்கின்றனர். இந்த இதழ், வாய்ப்புள்ளவர்கள் வாசிக்க, ஆவணப்படுத்துவது காலத்தே அவசியமாகும்.

## ஃப்ளாஷ்பேக்





ச.தினேஷ்குமார்

### உதயசூரியன் பெயர் சூட்டி வாழ்த்து!

2017-ஆம் ஆண்டு, எனது மனைவி மற்றும் குழந்தையுடன் இன்றைய கழக தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்த மறக்க முடியாத தருணம். கழகத்தின் வெற்றிச் சின்னமாம் உதயசூரியன் எனும் பெயரை அப்பொழுது நமது கழகத் தலைவர் அவர்கள் எனது மகனுக்குப் பெயராகச் சூட்டி வாழ்த்தினார்.

**- முனைவர் ச.தினேஷ்குமார்,**
**நடத்துநர், மாநகர போக்குவரத்துக் கழகம்,**
**சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மூவேந்தர்களுடன் கழக ஊர்வலம்!

1958-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 7 மற்றும் 8 தேதிகளில், தென்னாற்காடு மாவட்ட தி.மு.க. மாநாடு விருத்தாசலத்தில் நடைபெற்றது. மாநாட்டு ஊர்வலத்தில் அன்னப்பறவைபோல அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் தலைவர்கள் அழைத்து வரப்பட்டனர். ரதத்தை 43 ஜோடி காளைகள் இழுத்து வந்தன. அலங்கரிக்கப்பட்ட யானை முன் செல்ல, அதன்பின் குதிரை மீது கழகக் கொடியுடன் வீரர்கள் சென்றனர். அடுத்ததாக வட்ட வாரியாக கழகத் தொண்டர்கள் கொடியேந்தி அணி வகுத்தனர். சில பகுதி தொண்டர்கள் சேர - சோழ- பாண்டியர் வேடமணிந்து வந்ததுடன், கனக விசயர் கல் சுமந்து வரும் காட்சியை சித்தரித்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131